# ஜலாலாபாதில் இந்திய தூதரகத்தின் மீது தாக்குதல்

ஆகஸ்ட் 03, 2013

ஆப்கானிஸ்தானில் உள்ள ஜலாலாபாத்தில் உள்ள இந்த தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு அரசு செய்தி தொடர்பாளர் அளித்த பதில்:

“ஜலாலாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதல் காரணமாக ஏராளமான ஆப்கானிஸ்தான் காவல்துறையினர் உயிரிழந்துள்ளனர் மற்றும் படுகாயம் அடைந்துள்ளனர். இதைத்தவிர ஆப்கானிஸ்தானை சேர்ந்த பொதுமக்களும் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்த தாக்குதல் சம்பவம், ஆப்கானிஸ்தானில் உள்ள பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு எதிரான அச்சுறுத்தலைக்காட்டுகிறது. எல்லை கடந்து இயக்கப்படும் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத எந்திரத்தின் வாயிலாக இவை நடைபெற்று இருப்பதையே இது மீண்டும் எடுத்துக்காட்டுகிறது.

இத்தகைய தாக்குதல்கள் காரணமாக இந்தியா, ஆப்கானிஸ்தானின் புனரமைப்புப் பணிகள் மற்றும் அதன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு வழங்கியுள்ள உறுதிப்பாட்டில் இருந்து விலகாது. இந்த தாக்குதல் இந்தியாவிற்கு எதிரான தாக்குதல் அல்ல. ஆப்கானிஸ்தான் மக்கள் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரிலிருந்து வெளிவருவதற்கு உதவும் நடவடிக்கைகளுக்கு எதிரான தெளிவான தாக்குதல் ஆகும்.

இந்திய தூதரகத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த சூழலில் இந்த தாக்குதலில் உயிரிழந்த ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு படையினரின் வீரத்திற்கு நாம் நமது ஆழமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த தாக்குதலில்

உயிரிழந்த ஆப்கானிஸ்தான் மக்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.”

புதுதில்லி
ஆகஸ்ட் 3, 2013